## தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் பணமாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 7,003,591,048 ஆக இருந்த போதும் மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 6,975,667,205 ஆக இருந்ததுடன் ரூபா 27,923,,843 ஆன வேறுபாட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் புள்ளிவிபர பதிவேடுகளுடன் இணங்காவிட்டால் வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும். | கணக்கு வைத்தல் தவறு பிழை காரணமாக இடம்பெற்றுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புகையிரத திணைக்களத்தின் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 15,338,622,687 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த போதும் திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 4,868,024,578 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 10,470,598,109 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் வேறுபாடு தீர்வு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | புகையிரத திணைக்களத்திற்குரிய காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | சகல சொத்துக்களையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (03 புகையிரத நிலையங்களில்) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சில கட்டிடங்களின் பெறுமதி கொம்ரோலர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 19 நிரந்த வீதி பரிசோதகர் அலுவலகங்களில் வெவ்வேறு வகையான அளவிலான இடப்பட்டுள்ள புகையிரத தண்டவாளங்களின் மொத்த பாரம் 3,502,674 கி.கிராம் ஆக இருந்ததுடன் அவை 01 கிலோ கிராம் முன்னர் விற்பனை செய்யப்பட்ட விலையான ரூபா 50 வீதம் விற்பனை செய்தால் உழைக்க கூடியதாக இருந்த வருமானம் ரூபா 175,133,700 ஆக இருந்ததுடன் எஞ்சிய 26 | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டவற்றை முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அகற்றப்பட்ட புகையிரத தண்டவாளங்களை வனசீவராசிகள் திணைக்களத்திற்கு வழங்க வேண்டுமென 2020 நவம்பர் 10 ஆந் திகதிய அமப/20/1661/314/005 ஆம் இலக்க அமைச்சரவை சுற்றறிக்கையின் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | நிரந்த வீதி பரிசோதனை அலுவலகங்களில் இதனை விட கூடுதலாக பயன்படுத்தப்பட்ட இரும்பு அளவொன்று இருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,515,528,889 ஆக இருந்ததுடன் அது திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் ரூபா 1,519,706,694 ஆக இருந்தது. இதன் பிரகாரம் திணைக்கள பதிவேடுகள் மற்றும் திறைசேரி பதிவேடுகளுக்கு இடையே ரூபா 4,177,805 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டிலிருந்து இருந்து இம்மீதி இதுவரை தீர்வு செய்யபடாமல் இருந்தது. | மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் மீதி வகைப் படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கு இடையே ரூபா 1,470,717 ஆன வேறுபாட்டை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்கண்டு தீர்வு செய்யப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய தொகை ஓய்வூதிய பணிப்பாளரிடமிருந்து கிடைத்து கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் மீதிகளை பதிவழிப்பதற்கு போதியளவு தகவல் இல்லையென |
| (ஊ) | மதவாச்சி – மடு புகையிரத வீதி நிர்மாண செயற்திட்டத்தின் புகையிரத வீதியின் (Track) பெறுமதி ரூபா 10,077,821,527 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 11,441,402,866 ஆக இருந்தது. அதன் பிரகாரம் புகையிரத வீதியின் பெறுமதி ரூபா 1,363,581,339 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த பெறுமதியை சரியாக கணக்குகளில் பதிவு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாறான பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் ''பீ'' கணக்கின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் கடன்கொடுப்பனவு மற்றம் கடன் அறவீட்டிற்கு இடையே முறையே ரூபா 55,251,046 மற்றும் ரூபா 1,173,954 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | இவ்வாறான காரணங்களினால் கணக்குகளில் குறைபாடுகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. வேறுபாட்டை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாறான பிழைகள் 2020 ஆம் ஆண்டின் போது ஏற்படாமல் இருப்பதற்கு பார்த்து கொள்வதாக |

### 1.6.4 களஞ்சிய முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு பொருட்களுக்குரிய ரூபா 403,516,467 தொகை ஆண்டில் மிகை மதிப்பீடாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் இம்மதி இதுவரை தீர்வு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அதன் காரணமாக திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொகை மிகை மதிப்பீடு செய்தமையால் குறைவடைந்திருந்தது. | தீர்வு செய்யாமல் உள்ள மீதிகளை இனங்காண்பதற்கு செயற்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கணக்கின் ஆரம்ப மீதியின் வேறுபாடு ரூபா 394,680,245 ஆக இருந்தது. இந்த இருப்பு குறைவாக இருந்தமையால் இடம்பெற்றருந்தது. இது தற்போது சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கொள்வனவின் போது கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு தாமதக் கட்டணங்களாக ரூபா 8,758,560 தொகையும் | இவ்வாறான செலவினங்கள் இருப்பு பெறுமதிக்கு சேர்க்கப்பட்டமையால் இருப்பின் பெறுமதி தேவையற்ற | மேலதிக தாமதமொன்று இல்லாமல் துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,799,922 ஆன தாமதக் கட்டணமும் ரூபா 11,937,392 வங்கிக் கட்டணமும் இருப்பு பெறுமதிக்கு கூட்டியதன் காரணமாக பெறுவனவுகளின் பெறுமதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | வகையில் அதிகரிப்பொன்று இடம்பெறுவதால் சரியாக கணக்கு வைப்பு இடம்பெற வேண்டும். | |
| (இ) | நாணயக் கடிதங்களுக்குரியதாக வழங்குனர்களிடமிருந்து பொருட்கள் கிடைத்திருக்கையில் தகைமை சான்றிதழ் வழங்கப்படாமை, தகுதியற்ற பொருட்கள் பெறுவனவு மற்றும் திணைக்களங்களின் செலவின தலைப்புக்களிலிருந்து பணத்தை தீர்வு செய்யாதிருக்காமை போன்ற விடயங்கள் காரணமாக களஞ்சிய முற்பணக் கணக்கு தீர்வு செய்யப்படாமல் ரூபா 205,421,768 தொகை கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | கோவைகளை நாளதுவரையாக பேணுவதற்கும் முற்பணத்தை தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கோவைகளை முடியுமானவரை நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 யூன் 20 ஆந் திகதி இரத்மலான களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த SRS RDM 3385/15 ஆம் இலக்க தரவாணையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 50,289,517 பெறுமதியான புகையிரத கட்டளைக்கான உதிரிப் பாகங்களில் இனங்காணப்பட்ட சில உருப்படிகள் கிடைக்கவில்லை. அது தொடர்பாக 2018 நவம்பர் 14 ஆந் திகதி குறித்த வழங்குனர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரை பற்றாக்குறையான பொருட்களைக் கொண்டு வராமையால் முழுப்பெறுமதியும் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | குறைத்த வழங்கிய பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் கடன்பட்டோர் மீதிகளை தீர்வு செய்யவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறித்த உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் குறைவாக சமர்ப்பிக்கப்பட்ட உருப்படிகளுக்கான செலவினத்தை கழித்துக் கொள்ளும் வகையில் தகைமை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.5 எல்லைகளை மிகைத்திருந்தமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 30602 ஆம் விடய இலக்க களஞ்சிய முற்பணக் கணக்கின் வரவு மீதி ரூபா 152,833,037 ஆல் மிகைத்திருந்தது. | குறித்த எல்லைகளத் திருத்துவதற்கு அல்லது எல்லக்குள் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டினுள் கூடிய செலவினம் மற்றும் குறைந்த பெறுவனவு எல்லை திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் கூடிய வரவு மீதி திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை |

### 1.6.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| களஞ்சிய முற்பணக் கணக்கில் ரூபா 13 மில்லியனான தொழிற்பாட்டு நட்டமொன்று குறிப்பிடப் பட்டிருந்ததுடன் இதுவரை அதனை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் குறித்த தொழிற்பாட்டு நட்டத்தை தீர்வு செய்வதற்காக திறைசேரியின் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1991-1993 காலப்பகுதியில் கேள்வி தொடர்பாக இடம்பெற்ற நட்டமொன்றாக இருந்ததுடன் இது மிகவும் பழையதாக இருப்பதால் அது தொடர்பன தகவல்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. |

### 1.6.7 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) <u>நிலையான சொத்துப் பதிவேடு</u> | | |
| வடக்கு புகையிரத வீதி சமிஞ்சை மற்றும் மின் சமிஞ்சை செயற்திட்டத்தின் ரூபா 112,177,386 | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை/ நிதிப் பிரமாணம் 502(2) | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |
| (ஆ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழான மாதிரியொன்று பேணப்பட வேண்டியதுடன் அது நாளதுவரையாக பேணப்படல் வேண்டும். | நாளதுவரையாக பேணிச்செல்லப்படுவதாக |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் நாளாந்தம் பரீட்சிக்ககூடிய வகையில் பொறுப்பு பதிவேடொன்றில் பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | பொறுப்புக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்படுவதாக |
| (ஈ) | கடன் மற்றும் முற்பண பதிவேடு | | |
| | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் CC - 10 பதிவேடு நாளது வரைாக்கப்பட வேண்டும் | நிலுவை கடன் மீதிகள் இலகுவாக பார்த்துக் கொள்ளக்கூடிய வகையில் பதிவேடு பேணப்பட வேண்டும். | கடன் பதிவேடு சரியாக பேணிச்செல்வதற்காக விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக |

### 1.6.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காட்டப்படுகின்றன.

| அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நி.பி 396 | 03 வங்கிக் கணக்குகளுக்குரிய 06 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரை கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 311,917 பெறுமதியான 15 காசோலைகள் காணப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 06 மாதங்களுக்கு மேற்பட்ட கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது சீராக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி 383 | திணைக்களத்தின் 176-1-001-2-90727313 ஆம் இலக்க கணககிறகு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,852,344 தொகை இனங் கண்டிருக்கவில்லை. | நேரடி செலவு வைத்தல்கள் இனங்கணப்பட்டு காசேடு திருத்தம் செய்யப்பட வேண்டும். | இனங்காணப்பட்டு அறிக்கை இடப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி 570 மற்றும் 571 | ரூபா 34,499,383 பெறுமதியான 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பாக ஆராய்ந்துபார்த்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>-------------------------------- | | | |
| | • VIII ஆம் பந்தி | மேலதிக நேரம் ஒரு நாளின் வழமையான கடமை நேரத்திற்கு மேலதிகமாக கூடுதலாக வேலை செய்யும் மணித்தியாலங்களை அடிப்படையாக கொண்டே கணக்கிடப்படுகின்றது. எனினும் வாரங்களை அடிப்படையாக கொண்டு கடமை நேரங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கையில் மேலதிக நேரம் வாரத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மணித்தியாலத்திற்கு மேலதிகமாக வேலை செய்த மணித்தியாலங்களை அடிப்படையாக கொண்டே கணிப்பிட வேண்டும். எவ்வாறாயினும் நாளொன்றுக்கு 07 மணித்தியாலங்கள் வீதம் வாரத்திற்கு 42 மணித்தியாலத்தினை மிகைத்து வேலை செய்த காலத்திற்கு மாத்திரம் மேலதிகநேர படிகள் பெற்றுக்கொள்ளபட வேண்டிய போதிலும் வழமையான கடமை நேரங்கள் உட்பட புகையிரத ஒழுங்குபடுத்துனர் மேலதிக நேர படிகளைப் பெற்றுக் கொண்டிருந்னர். | தாபன விதிக்கோவையின் VIII ஆம் பந்தியின் பிரகாரம் நவடிக்கை எடுக்க வேண்டும். | மேலதிக நேர வேலையை கட்டுப்படுத்துவதற்காக திணைக்களம் என்ற வகையில் அதிகமான சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2015 யூலை 10 ஆந் 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 05 ஆம் பந்தி | திணைக்களத்தினால் கைதவிர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் 46 இனங்காணப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களை மதிப்பீடு செய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டு வாகனங்களை மதிப்பீடு செய்தல் 2019 ஆகஸ்ட் மாதம் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கிவல்லை. 01/2018 மற்றும் 2018 மார்ச் 19 ஆந் திகதிய நிதி மற்றும் வெகுசன | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்க்கப்பட வேண்டிய காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ்வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கு பெறுகை ஆவணங்கள் தயாரிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊடகத்துறை அமைச்சு சுற்றறிக்கையின் 2(அ) பந்தியின் பிரகாரம் கைதவிர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் 2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு கைதவிர்க்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2(ii) ஆம் பந்தி | ஓய்வுபெற்ற அரசின் உத்தியோகத்தர்களை 12 மாதங்களுக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியுமான போதும் அதற்கு முரணாக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிய உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சேவைகளை நடாத்திச் செல்வதற்காக பயன்படுத்தக்கூடிய இலகுவான முறை என |
| (உ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| | (i) 1948 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 9912 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி பிரமாணங்களுடன் வாசிக்கப்பட வேண்டிய 1947 இன் 08 ஆம் இலக்க காணிச் சட்டத்தின் 105 ஆம் பிரிவு | டீ.ஆர் விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள 25.5 பேர்ச் அளவிலான புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணியான்று புகையிரத பொது முகாமையாளரின் அதிகாரமின்றி நகர அபிவிருத்தி அதிகார சபையால் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | புகையிரத பொது முகாமையாளரின் அதிகார கையளிப்பின் மீது மாத்திரம் புகையிரத திணைக்களத்தின் காணி குத்தகைக்கு வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். | புகையிரத பொது முகாமையாளரின் இணக்கப்பாடு இல்லாமல் நகர அபிவிருத்தி அதிகார சபையால் காணி கையேற்கப்பட்டுள்ளதாக |
| | (ii) புகையிரத திணைக்களத்தின் பொது பிரமாணங்கள் கோவையின் 3.14 ஆம் பந்தி | பிரவேசச் சீட்டு கருமபீடங்களில் உள்ள பிரவேசச்சீட்டுக்கள் தொடர்பாக அவ்வப்போது சரி பிழை பார்த்தல் புகையிரத நிலைய அதிபரால் மேற்கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டதாக இருப்பு புத்தகங்களின் பிரகாரம் அவதானிக்கப்படவில்லை. | புகையிரத திணைக்களத்தின் பொது பிரமாணங்கள் கோவையின் 3.14 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | புகையிரத நிலைய அதிபர்களுக்கு ஆலாசணை வழங்கப்பட்டுள்ளதாக |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | புகையிரத திணைக்களத்தின் பொது பிரமாணங்கள் கோவையின் 3.7 ஆம் பந்தி | உரிமையாளர்களால் கையேற்கப்படாத பொதிகள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் மதவாச்சி புகையிரத நிலையத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிமையாளர்களால் கையேற்கப்படாத பொதிகள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். | உரிமையாளர்களால் கையேற்கப்படாத பொதிகள் தொடர்பாக சிக்கல் ஒன்று ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்த பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வரி வருமானம் தொடர்பாக பராமரிக்கப்படும் கணனி மயப்படுத்தப்பட்ட வரி சேகரிப்பு நடைமுறையை செயற்திறனாக்கும் நோக்கில் மென்பொருளொன்றைத் தயாரிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 900,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் இதுவரை அச்செயற்பாட்டை வெற்றிகரமாக்குவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | வரி அறவிடுவதை செயற்திறனாக்குவதற்கு கணனி தொழில் நுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 900,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய காணியை குத்தகைக்கு வழங்கி ரூபா 36 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதும் அது பெறவேண்டிய வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எரிபொருள் வழங்கலுக்காக புகையிரத திணைக்களம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்வதற்குள்ள | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 நவம்பர் 30 ஆந் திகதி அளவில் இத்தொகை அறவிடப்பட்டதாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 199.9 மில்லியன் தொகையில் மேற்படி நிலுவைத் தொகையை தீர்வு செய்வது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | நகர்சேர் கடுகதிப் புகையிரத சேவையொன்றை நடாத்திச் செல்வதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட திகதி முதல் 07 நாட்களுக்குள் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பணத்தை செலுத்த வேண்டிய போதும் 2019 யூன் முதல் திசெம்பர் வரை பட்டியலுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 2,221,010 ஆகு இருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு திணைக்களம் செயற்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு உரிய பிரிவுகளுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக |
| (ஈ) | கம்பஹா புகையிரத நிலையத்தின் சிற்றுண்டிச்சாலை 1½ ஆண்டு அளவிலான காலப்பகுதியில் குத்தகைக்கு வழங்காமல் விளைவற்ற வகையில் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இந்த சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கி ரூபா 811,800 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | உரிய சட்டவிதிகள் மற்றும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பயணிகளின் வருகை குறைவினால் குத்தகையாளர் இந்த சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டிருந்தது. |
| (உ) | கண்டியிலிருந்து மாத்தளை வரையிலும் கண்டியிலிருந்து நாவலப்பிட்டி வரையிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட புகையிரத கார் (Rail Car) இற்காக புகையிரத நிலையங்கள் நிறுத்துமிடங்களில் புகையிரத்திற்கு ஏறும் பயணிகளுக்காக பிரவேச்சீட்டு வழங்கல் புகையிரத ஓட்டுனர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்காக திணைக்களம் | ஆசன ஒதுக்கீடு உரிய உரிய நடைமுறை யொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தின் போது செயற்படுத்தப்படும் e – Tickting system முறைமையின் மூலம் இப்பிழைகள் நிலைமை சரியானதே. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் பிரவேசசீட்டு வேறு கடதாசியால் அச்சிடப்பட்டு பிரவேச சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த ரேல் கார் வண்டியை ஓட்டத்தில் ஈடுபடுத்தி மாதமொன்றுக்கு ரூபா 150,000 அளவிலான வருமானமொன்று உழைத்த போதும் இடம்பெறககூடிய நட்டங்கள் மற்றும் ஆபத்து தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | **<u>காணி குத்தகைக்கு வழங்கல்</u>** | | |
| (i) | 1948 ஒக்தோபர் 15 ஆந் திகதி 9012 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1948 காணி பிரமாணங்களின் கீழ் காணி தொடர்பான அதிகாரம் புகையிரத பொது முகாமையாளர்களுக்கு உரித்தான போதும் பின்னர் அதற்காக புகையிரத திணைக்களத்தின் காணி உத்தியோகத்தர் என சேர்க்குமாறு பிரமாணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக அந்த அதிகாரம் வர்த்தக அத்தியட்சகருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | கட்டளைச் சட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வேறு நபர்கள் பயன்படுத்த முடியாமல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கம் அதிகாரம் புகையிரத பொது முகாமையாளரால் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | முன்னைய காலப்பகுதியில் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி தொடர்பான பதிவேடொன்று பராமரிக்கப்படாதிருந்ததுடன் இககாணியின் எல்லை மற்றும் காணி தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளாமை காரணமாக எந்தளவிலான காணி திணைக்களத்திடம் உள்ளதா என்பது தொடர்பாக வெளிப்படுத்தப்படாததுடன் இனங்காணப்பட்டிருந்த | திணைக்களத்திடம் உள்ள காணி தொடர்பாக தரவு முறையொன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கி பேணப்படல் வேண்டும். | காணி குத்தகைக்கு வழங்கல் பிரிவின் பதிவேட்டறையொன்றை மீண்டும் ஸ்தாபிப்பதற்கும் அதற்கு மேலதிகமாக தரவு முறையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

<table>
<tr><td></td><td>காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.</td><td></td><td></td></tr>
<tr><td>(iii)</td><td>காணி குத்தகைக்கு வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 12 கோவைகள் எழுமாறாக பரீட்சிக்கப்பட்ட போது குத்தகை காணிகளில் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.</td><td></td><td></td></tr>
<tr><td>•</td><td>10 குத்தகை காணிகளுக்காக 2017 ஆம் ஆண்டின் பின்னர் நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் நிலுவை தொகை ரூபா 136,485,202 ஆக இருந்தது. மிக நீண்டகாலமாக இருந்து வரும் இந்த நிலுவை தொகை தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.
<table>
<tr><td>05 ஆண்டுகளுக்கு மேல</td><td>10 ஆண்டுகளுக்கு மேல</td><td>20 ஆண்டுகளுக்கு மேல</td><td>20 ஆண்டுகளுக்கு மேல</td><td>30 ஆ டு களு கு மே</td></tr>
<tr><td>23,430,450</td><td>9,030,585</td><td>-</td><td>74,274,658</td><td>29,74 510</td></tr>
</table></td><td>நிலுவைத் தொகையை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.</td><td>நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை துரிதமாக்குமாறு குறித்த பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>•</td><td>குத்தகை கோவைகளில் குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கைகள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.</td><td>குத்தகை கோவைகளை நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td><td>- மேற்படி -</td></tr>
<tr><td>•</td><td>புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி ஏனைய தரப்பினரால் கையேற்கப்பட்டு வருமானம் உழைக்கும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.</td><td>இதற்காக திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td><td>சட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை துரிதப்படுத்துமாறு குறித்த பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| (எ) | புகையிரத திணைக்களத்தின் காணிகளை குத்தகை வழங்குவதற்குரிய உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல், உப குத்தகைக்கு வழங்குதல், ஆரம்ப நோக்கங்களுக்கு முரணாக செயற்படுதல் மற்றம் குத்தகை வாடகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற செயற்பாடுகள் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | காணி குத்தகை வழங்குவதற்குரிய கணனி மென்பொருள் ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல், உப குத்தகைக்கு வழங்குதல் போன்றவற்றை தேடிப் பார்த்து நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளன. |
| (ஏ) | 1998 செப்தம்பர் 10 ஆந் திகதிய 10/08/387 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் LA34817 உடைய காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அக்குத்தகை உடன்படிக்கை திணைக்களத்திடம் காணப்படவில்லை. | அனைத்து ஆவணங்களையும் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய பதிவேட்டறையொன்று காணப்படாமை இந்நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது. எனினும் எதிர்காலத்தில் பதிவேட்டறையொன்ற ஸ்தாபிக்கப்படுவதால் இந்நிலைமை தவிர்க்கப்படும். |
| (ஐ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 1,707,694,480 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) மீளாய்வாண்டின் போது ரூபா 1,052,847,205 ஆன நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 45 சதவீதம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது. | நிலுவைத் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 47,445,141 தொகையில் ரூபா 7,144,037 தொகை 2020 யூன் 30 அளவில் அறவிடப்பட்டிருந்தன. எஞ்சியவற்றை விரைவில் அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| | (ii) புகையிரதம் மூலம் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி | - மேற்படி - | இத்தொகையிலிருந்து ரூபா 37,949,865 தொகை 2020 யூன் 30 ஆந் திகதி வரை |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை 31 நிறுவனங்களிடமிருந்து ரூபா 84,430,855 தொகை நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா ரூபா 20,514,436 தொகை அறவிடப்பட வேண்டிய 17 நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. | | அறவிடப்பட்டிருந்தது. தற்போது சில நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததால் அத்தொகையை அறவடுவதற்கு சிக்கலொன்றாக இருந்தது. |
| (iii) | புகையிரத நிலையங்களிலிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,237,958 தொகை அறவிடப்பட வேண்டியதுடன் அதில் ரூபா 11,924,341 ஆன நிலுவை பயணிகள் வருமானம் ரூபா 5,422,538 தொகையும் நானாவித நிலுவை ரூபா 891,079 ஆக இருந்தது. | - மேற்படி - | எதிர்காலத்தில் கால ரீதியாக தீர்வு செய்வதாக |

## 2.2 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 306-2-1-1404 செலவின விடயத்தின் கீழ் ரூபா 1,781,866 ஆன அதாவது தேறிய ஏற்பாட்டில் 38 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு காரணமாக உள்ளூராட்சி மன்றங்களால் உரிய நேரத்தில் வீதவரி பட்டியல்களை சமர்ப்பிக்காமை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. | ஓதுக்கீட்டை மாற்றுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட காரியத்தை செய்து முடிப்பதற்கு தேவையான வளங்கள் உள்ளனவா என்பதைப் பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும். | கிடைத்துள்ள நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் 2020 நிலுவை வீதவரி கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் கொள்வனவிற்காக 306-2-2-2002 செலவின | சேமிப்புக்களுக்கு காரணங்கள் சமர்ப்பிக்கும் | வழங்குனர்களை கண்டு பிடிப்பதல் சிக்கல்கள் மற்றும் சிக்கனமாக |

| | | |
|---|---|---|
| விடயத்தின் கீழ் தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து 76 சதவீதம் அதாவது ரூபா 1,215,222 தொகை சேமிக்கப்பட்டிருந்த போதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போது ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | செயற்பட்டமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக |
| (இ) 306-2-4-2104 (46) மற்றும் 306-2-2104(47) ஆம் இலக்க மூலதன நிதி ஏற்பாடுகளின் கீழ் தேறிய ஏற்பாடுகளில் 15 சதவீதம் சேமிக்கப்பட வேண்டிய போதும் இவ்விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடான முறையே ரூபா 300,000,000 தொகை மற்றும் ரூபா 200,000,000 தொகையான முழுத்தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 15 சதவீதம் சேமிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அதனையும் விட கூடுதலாக நிறுத்தி வைப்பதற்கு காரணங்கள் தெளிவுபடுத்தப் பட வேண்டும். | இவ்விடயத்திற்குரிய செயற்பாடுகள் இடம்பெறாமையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

## 2.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தற்போது கடமையில் இல்லாத உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 85,000,523 ஆக இருந்தது.இது தொடர்பாக கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | |
| (அ) கடன் தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மொத்த பெறுமதியில் ரூபா 36,624,501 அதாவது 43 சதவீதம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளாக இருந்ததுடன் அவற்றை அறவிடுவது தொடர்பாக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்வுசெய்யப்பட வேண்டிய மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கணக்காளர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக |

| | | |
|---|---|---|
| (ஆ) திணைக்களத்தில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 71,431 ஆக இருந்தது. | - மேற்படி - | கடன்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக |
| (இ) திணைக்களத்தில் சேவை புரியாத மற்றும் ஆதனக் கடன்கள் பெற்றுக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 5,924,027 ஆக இருந்தது. | - மேற்படி - | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

## 2.4 பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரியால் வழங்கப்படும் எஸ்.எஸ். 92 ஆம் இலக்க பொறுப்பு தொடர்பாக திரட்டிய கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களுக்கு இடையே ரூபா 302,198,949 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணக்குகளில் புள்ளிவிபர பதிவேடுகளுடன் இணங்காவிட்டால் வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும். | சிகாஸ் கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடு சமர்ப்பிக்கப்படாமை |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 தொலைநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயணிகள் மற்றும் பொருட்களை பாதுகாப்பான நம்பிக்கை மிகு மற்றும் உரிய நேரத்தில் பயணிக்கும் சிக்கனமான செயற்திறன் மிக்க போக்குவரத்து சேவையை வழங்குவது திணைக்களத்தின் முக்கிய பணியாக இருந்த போதிலும் புகையிரத சேவை தொடர்பாக புகையிரத விபத்துக்கள், | தொலைநோக்கு மற்றும் செயற்பணி நிறைவேற்றப்படும் வகையில் செயலாற்றலை உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விபத்துக்கள் மூலாதாரமாக புகையிரத வீதிகளில் பலவீனங்கள், புகையிரத தொகுதியில் பலவீனங்கள், சமிஞ்சை முறைமையில் பலவீனங்கள், காலநிலை நிலைமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்ததுடன் அவ்விடயங்கள் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| காயங்கள், மரணங்கள் மற்றும் காட்டு யானை மரணங்கள் முறையே 1385, 369, 215, மற்றும் 7 என அறிக்கையிடப்பட்டிருந்தன. மேலும் 2254 சரக்கு புகையிரதங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 9,718 பயணிகள் புகையிரதங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தன. | | வருடந்தம் திறைசேரியால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளைக் கொண்டு செயற்பட வேண்டியுள்ளதால் மனித உழைப்பு நிர்ணயிக்கப்பட்ட வகையில் புகையிரத திணைக்களத்திற்கு கிடைக்காமையால் உரிய இலக்கை அடைய முடியாமல் இருந்தது. |

**3.2 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 4.3.1 உருப்படி கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் செயன் முன்னேற்றமாக 125 புகையிரத நிலையங்களில் வேலைகள் நடைபெறுவதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதும் வீதி மற்றும் கைத்தொழில் பிரிவின் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நடைபெறும் வேலைகளின் கூட்டுத்தொகை 33 ஆக இருந்தன. அதன் பிரகாரம் திட்டமிடல் பிரிவில் தயாரிக்கப்பட்ட செயன் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதுள்ளது. | முகாமைத்துவ தீர்மானங்களை எடுப்பதற்காக சரியான தகவல்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சரியான தகவல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக |
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | எதிர்காலத்தில் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

## 3.3 எதிர்பார்த்த விளைவு மட்டத்தினை எட்டாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அம்பேபுஸ்ஸ கல் குவாரியின் இயந்திரங்களின் தற்போதய இயலளவு அடிப்படையில் இயந்திர மணித்தியாலத்திற்காக பயன்படுத்தும் எரிபொருள் அளவு மற்றும் ஈடுபாட்டு அளவின் பிரகாரம் உற்பத்தி மதிப்பீடு பௌதீக ரீதியாக மேற்கொள்ளம் போது பின்வரும் தீர்மானங்களுக்கு வர முடியும் | | |
| (அ) உள்ளீடாக பயன்படுத்தப்பட்ட 21 கியுப் கற்களை கிரேஷர் செய்யம் போது உற்பத்தியாக 1 ½ அங்குலம் கற்கள் 16 கியுப்களும் ¾ அங்குல கற்கள் 01 கியுப் உம் 04 கியுப் கல்லு தூளுமாக 21 கியுப் கிடைததிருந்தன. இதன் பிரகாரம் உற்பத்தி கலவை விகிதம் 16:1:4 ஆகும். 2018 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட பௌதக கலவை விகிதத்த சீராக்கும் போது 94.5 கியுப் 3/4'' கற்கள் மிகையொன்று அவதானிக்கப்பட்டதுடன் 94.5 கியுப் பற்றாக்குறையொன்று உள்ளதாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | கல் வேலைத் தளத்தின் வெளியீட்டு இயளவின அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிர்ணயிக்கப்பட்ட இயலளவினை அதிகரிப்பிற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) உள்ளீடாக பயன்படுத்தப்படும் 21 கல் கியுப் ஜெனரெட்டரைப் பயன்படுத்தி கிரஷர் பண்ணும் போது விளைவற்ற காலம் உட்பட 02 மணித்தியாலங்கள் 35 மணித்தியாலங்களாக இருந்ததுடன் 1 ½ அங்குத்தில் ஒரு கியுப் கல் உற்பத்திக்காக செலவிடப்பட்ட எரிபொருள் அளவு 3.31 லீற்றர்களாகும். | விரயம், ஊழல் என்பவற்றை குறைத்து உயர் இயலளயவில் கல் வேலைத்தளம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1 ½ அங்குல 1,135 கியுப்களுக்காக எரிக்க வேண்டிய எரிபொருள் அளவு 3,759 லீற்றராக இருந்ததால் எரிக்க வேண்டிய எரிபொருள் அளவான 6,349 லீற்றருடன் ஒப்பிடும் போது 2,590 லீற்றர் எரிபொருள் கூடுதலாக பயன்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (இ) | இந்த கல்வேலைத்தளத்திற்காக புவிச்சரிதவியல் கணிப்பீடு மற்றும் சுரங்க அலுவலகத்தின் மூலம் அகழ்வு பொறியியலாளர் ஒருவர் இல்லையென அறிவித்து B தர அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதால் வருடாந்தம் ஆகக்கூடிய உற்பத்தி கல் கியுப் 6,300 மாத்திரமாக இருந்தன. 2015 ஆம் ஆண்டு வரை A தரத்திலான அகழ்வு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிஎருந்தால் மீண்டும் அந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டு உற்பத்தியை அதிகரித்து மேலதிக வருமானமொன்றை பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | A தரத்திலான அனுமதிப்பத்திர மொன்றை வழங்குவதற்காக முகாமை கவனம் செலுத்துதல் வேண்டும் | அகழ்வு பொறியியலாளரின் ஆலோசணை மற்றும் சேவையை பெற்றுக் கொள்வதற்கு ஒப்பீட்டு விலை சமர்ப்பிப்பட்டுள்ளதால் அதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக |

## 3.4 எதிர்பார்த்த பயனினை (Out come) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஜப்பான் அரசின் உதவியாக ரூபா 564.20 மில்லியனான ஜப்பான் உற்பத்திகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 311.6 மில்லியன் பெறுமதியான உற்பத்திகள் புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்திருந்த | உதவிகளில் இருந்து எதிர்பார்க்கப்ப்ட்ட நலன்களைப் பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொரோனா தொற்று நிலைமை காரணமாக உபகரணங்களை பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்ததாக |

போதும் 2020 யூன் 30 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 56,815,021 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 செயற்திட்டங்களை முடிப்பதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 121 மில்லியன் பெறுமதியான 05 செயற்திட்டங்கள் 2019 இன் இறுதி வரை பெற்றுக்கொண்ட செயன்முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீடு செய்த போது அவற்றை ஆரம்பிக்கும் காலதாமதம் ஒன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அச்செயற்திட்டங்களை உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்வது தொடர்பாக சிக்கல்கள் காணப்படுவதாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | திட்டமிட்டதன் பிரகாரம் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மனித உழைப்பு மற்றும் கிடைக்கும் கட்டுநிதி பற்றாக்குறை பேரில் தாமதமாகியுள்ளது. |

### 3.6 நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயன்முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) இரத்மலான பொறியியல் உப திணைக்களத்தின் உத்தியோகபூர்வ விடுதி வளவிற்காக நீர்மானி பொருத்துவதற்காக ரூபா 15 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதும் அச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. அதனால் மேலும் அவ்வளவில் நீர் | உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு நீர பாவனைக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூபா 25 மில்லியனுக்கு அண்மித்த தொகை திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது. இந்நிலைமை யை தவிப்பதற்காக துரிதமாக நடவடிக்கை | புகையிரத திணைக்களத்தினால் கோரப்பட்ட போதும் நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டுச் செலவினத்தை திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ள நேர்ந்தது. | எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | பொருட்கள் போக்குவரத்திற்கா ரூபா 8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த செயற்பாடு நிறை வேற்றப்பட்டிருக்க வில்லை. | நிதியத்தை ஒதுக்கீடு செய்த செயயற்பாட்டிற்காக ஈடுபடுத்தி செயற் திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வடக்கு புகையிரத வீதியின் (மஹவ – அனுராதபுரம்) சமிஞ்சை மற்றும் தொடர்பாடல் முறைமையை பராமரிப்பதற்காக அ.டொ.136 மில்லியன் வெளிநாட்டுக் கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதியம் ஒதுக்கீடு செய்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தி புகையிரத சேவையை வினைத் திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) | நிரந்த வீதிப் பரிசோதனை அலுவலகத்திற்கு தேவையான இயந்திரங்கள் மற்றம் உபகரணங்கள் பாலங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,570 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்ல | - மேற்படி - | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

பின்வரும் அவதானிபக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) <u>மதவாச்சி நிரந்தர வீதிப் பரிசோதனை அலுவலகம்</u> | | |
| (i) வடக்கு வீதியின் மொத்த துாரம் 35 கிலோ மீற்றருக்கு 16.22 கிலோமீற்றருக்கு இடையில் மேவுகை செய்யப்படும் வகையில் வேக எல்லைகளை விதித்திருந்தமையால் மதவாச்சியிலிருந்து நிரந்தர வீதிப் பிரதேசத்தினுள் புகையிரதம் பயணிக்கக் கூடிய பொதுவான வேகம் மணித்தியாலத்திற்கு 32.91 கிலோ மீற்றராக இருந்தமையால் அவ்வேகத்தினால் அப்பிரதேசத்தை கடந்து செல்வதற்கு புகையிரத்திற்கு எடுக்கும் காலம் 01 மணித்தியாலமும் 06 நிமிடங்களாகும். வேக எல்லையை அகற்றி புகையிரதம் மணித்தியாலமொன்றுக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பிரயாணித்தால் அப்பிரதேசத்தை கடந்து செல்ல எடுக்கம் காலம் 30 நிமிடங்களாக இருந்ததுடன் இதன் பிரகாரம் சேமிக்கக்கூடிய காலம் 36 நிமிடங்களாகும். | வேக எல்லையை அகற்றி புகையிரத ஓட்டத்தை செயற்திறனாக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் மஹவ முதல் வவுனியா வரை புகையிரத வீதி புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்ததுடன் அதன் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் வேக எல்லையை குறைத்து புகையிரத ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு கருதிற் கொள்வதாக |
| (ii) வேக எல்லையை விதிப்பதற்கு பிரதான காரணங்களாக சிலிப்பர் கட்டைகளின் பலவீனம், தண்டவாளங்களின் பலவீனம், பலன்ஸ் போதியளவில் இடாமை போன்றவை இனங்காணப்பட்ட போதும், அவற்றில் | பலவீனமான இடங்கள் இனங் காணப்பட்டுள்ள தால் விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். | தண்டவாளங்கள், கொங்கிரீட் சிலிப்பர், கருங்கல் மற்றும் ஏனையவற்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு நிதிஏற்பாடு இல்லாமை மற்றம் காணப்படும் உழியர் வெற்றிடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்கறையொன்று காணப்படுவது அவதானிக்கப்படாமையால் புகையிரத சேவையை செயற்திறன் இல்லாமல் போவதற்கு தாக்கமளிக்கும் பிரதான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | | காரணமாக வீதிப் பராமரிப்பு செயற்பாடுகளுக்காக போதியளவு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படாமை |
| iii) | மதவாச்சி வேலைத்தளத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 60/65 மில்லிமீற்றர் அளவிலான பெலன்ஸ் பௌதீக ரீதியாக அளவிடும் போது 34 கியுப் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதன் நிதிப் பெறுமதி ரூபா 435,500 ஆகும். | பற்றாக்குறைக்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பலன்ஸ் உடன் கற்தூள் கலக்காமல் கலக்காதபடி செயற்படுமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக |
| (ஆ) | கண்டி நிரந்தர வீதிப் பிரதேசத்தினுள் விதிக்கப்பட்டுள்ள அனைத்து வேக எல்லைகளும் 2008 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும் இவ்வேக எல்லைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேக எல்லையை அகற்றி அல்லது வேறு நடைமுறைகள் எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மட்டுப்படுத்தப்பட்ட நிதிஏற்பாடு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கட்டுநிதி பேரில் அதியவசிய வேக எல்லைகள் மாத்திரம் வைத்து ஏனைய வேகஎல்லைகளை அகற்றுதல் இடம் பெறுவதாக |
| (இ) | பொதிகள் விநியோக பதிவேட்டின் பிரகாரம் உரிமையாளர்களால் விடுவிக்கப்படாத பொதிகள் காணப்படுவதாக பதிவேட்டில் காணப்பட்ட போதும் அப்பொதிகள் பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையான பரிசோதனை நடாத்தி தீர்வு காணப்பட வேண்டும். | உரிமையாளர்களால் விடுவிக்கப்படாத பொதிகள் தொடர்பாக புகையிரத மதியுரை கோவையின் பிரகாரம் செயற்படுவதாக |

## 3.8 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தும் செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 200 வீதிப் பாதுகாப்பு முறைமைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைவாக 2017 ஜனவரி 27 ஆந் திகதியாகும் போது 200 வீதி பாதுகாப்பு முறைமைகளை முடித்து ஒப்படைக்க வேண்டி இருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முடிக்கப்பட்டிருந்த வீதி பாதுகாப்பு முறைமைகளின் எண்ணிக்கை 155 ஆகும். | நீண்டகாலமாக உள்ள இச் செயற்திட்டத்தை ஒப்பந்தக்காரரைக் கொண்டு துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது காணப்படும் கொவட் 19 தொற்று நிலைமை காரணமாக பாதுகாப்பு முறைமைகளை பொருத்துவதில் தாமதம் இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் கொடுப்பனவு செயற்பாடு தாமதமாகி உள்ளது. |

## 3.9 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) <u>S 13 உத்வேக தொகுதியை கொள்வனவு செய்தல்</u> | | |
| (i) உத்வேக ரயில் தொகுதியை கொள்வனவு செய்வதற்காக புகையிரத திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் அலகொன்றை கப்பலேற்றும் விலை ரூபா 1,166.70 மில்லியனாக இருந்ததுடன் கேள்வி கூறுவிலை கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட விலை ரூபா 1,402.80 மில்லியனாக இருந்தது. இதன் பிரகாரம் அந்த உத்வேக கட்டளைக்காக | பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் முன்னைய அனுபவங்களை கருத்திற் கொள்ளல் வேண்டும். | பொறியியலாளர் மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது சந்தைப் பெறுமதி, வெவ்வேறு தொழில்நுட்ப நடைமுறை தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டு விலை தீர்மானிக்கப்படும். மேலும் உள்நாட்டில் உத்வேக கட்டளைகள் தயாரித்தல் அல்லது பிரதான உதிரிப்பாக உற்பத்தியொன்று இடம்பெறாமையால் 20 சதவீத விலகல் ஒன்றுடன் இப்பரிந்துரை செயற்படுத்தப்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளர் மதிப்பீட்டினை விட செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 236.10 மில்லியனாக இருந்தது. | | |
| (ii) | கூறுவிலை கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலை 63 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதாவது ரூபா 9,135 மில்லியன் ஆகும். அவ்விலை பொறியியலாளர் மதிப்பீடான ரூபா 7,317.60 மில்லியனை விட கூடுதலாக இருப்பதால் அமைச்சரவை கலந்துரையாடல் குழுவுடன் கலந்துரையாடும் போது மேற் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திருத்திய விலையான ரூபா 8,787 மில்லியன் உடன் ஒப்பிடும் போது திருத்திய விலையும் பொறியியலாளர் மதிப்பீட்டை விட ரூபா 1,469.40 மில்லியனால் கூடுதலாக இருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கேள்வி மூலம் வழங்கல் இடம்பெறும் போது இரு தரப்பினராலும் மேற் கொள்ளப்படும் நிபந்தனைகள் மற்றும் இணக்கப்பாடுகள் வழங்கப்பட்டு பொருளின் தரம் கருத்திற் கொள்ளப்பட்டு நியாயமான விலை கோரல் மற்றும் பரீட்சித்தல் பரிந்துரைத்தல் இடம் பெறுகின்றது. |
| (iii) | உத்வேக தொகுதியை கொள்வனவு செய்வதை துரிதப் படுத்ததுவதற்காக சிக்கன வகுப்பின் கூடம் (EC) 01 குறைக்கப்பட்டு முன்னர் தீர்மானிக்கப் பட்ட விலையின் ஒரு பகுதியும் கழிக்கப்பட்டு இறுதி இணக்கப்பாட்டிற்கு வந்து விலை ரூபா 8,417.25 மில்லியனாக இருந்ததுடன் | சிக்கனமாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்நாட்டில் உத்வேக கட்டளைகள் உற்பத்தியை செய்தல் அல்லது பிரதான பகுதிகள் உற்பத்திகள் இடம்பெறாமையால் சந்தையின் பொதுவான பெறுமதியின் கீழ் மற்றும் தொழில்நுட்ப முறைமைகளையும் கருத்திற் கொண்டு விலை தீர்மானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | அவ்விலையும் பொறியியலாளர் மதிப்பீடான ரூபா 7,317.60 மில்லியனை விட ரூபா 1,099.65 ஆல் அதிகமாகும். இதன் காரணமாக சிக்கன வகுப்பின் 01 கூடம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | வழங்குனரால் முற்பணம் செலுத்திய மற்றும் நாணயக் கடிதங்கள் திறந்த திகதி அல்லது திட்டமிடப்பட்ட திட்டங்கள் ஆகிய திகதிகளின் பின்னர் வரும் திகதி முதல் 14 நாட்களுக்குள் முதலாவது உத்வேக தொகுதி அனுப்ப வேண்டியதுடன் 22 மாதங்களுக்குள் மற்றைய உத்வேக தொகுதியை அனுப்ப வேண்டிய போதிலும் அத்திகதியில் தாமதமாகும் 30 நாட்களுக்கு பின்னர் அடுத்து வரும் ஒவ்வொரு வாரத்திற்கும் 0.5 சதவீத தாமதக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டும். குறித்த காலப்பகுதிக்குப் பினன்ர் உத்வேக தொகுதி வழங்கப்பாடமை காரணமாக செலுத்த வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 35,619,617 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | முதலாவது உத்வேக தொகுதி அங்கீகரிக்கப்பட்ட தினம் முதல் 14 மாதங்களுக்குள் வழங்கப்பட்டுள்ளதுடன் இறுதி உத்வேக கட்டளை தொகுதி 2019 திசெம்பர் 23 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தமையால் மொத்த வழங்கல் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் 20 மாதங்களுக்குள் வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) சிலிப்பர் கட்டைகள் வழங்கலுக்காக திணைக்களத்தினால் 2017 மார்ச் 16 ஆந் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் விசேட நிபந்தனை 8.1 இன் பிரகாரம் குறித்த பொருள் தொடர்பாக அவை பொறுப்பேற்று 02 ஆண்டுகளுக்குள் வழங்குனருக்கு உத்தரவாதகாலத்திற்கு உட்படுவதாகவும் அந்த உத்தரவாத காலத்தை மேவுகை செய்வதற்காக செயலாற்றல் பிணையொன்று அமுலில் இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை கைச்சாத்திட்ட 2017 மார்ச் 16 ஆந் திகதி முதல் 2019 யூலை 31 ஆந் திகதி வரை 02 ஆண்டுகள் 04 மாதங்களுக்குள் 1,950 சிலிப்பர் கட்டைகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கையின் விசேட நிபந்தனை யி ன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக 2020 பெபர்வரி 13 ஆந் திகதியில் முடிவடைதற்கு இருந்த செயலாற்றல் பிணைக்குரிய Acceptance பெறுகை அடிப்படையில் உத்தரவாதக் காலம் மேவுகை செய்யப்படும் வகையில் எதிர்காலத்தில் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. |

**3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 18 தொழிற்சாலைகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 06 வாகனங்கள் திருத்தம் செய்யாமல் கைவிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திருத்தம் செய்வதற்காக அதிக செலவினமொன்று மேற்கொள்ள நேர்வதாக |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் அங்கீகாரமின்றி புகையிரத பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் மருதானை பகுதியிலான காணியில் இரண்டு அத்துமீறிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன | அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டு அவற்றை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை விஞ்சிய மற்றும் ஓட்டத்தில் ஈடுபடுத்தாத ரூபா 358,940,567 பெறுமதியான புகையிரத என்ஜின்கள் மற்றும் சக்கரங்களை நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பயன்படுத்த முடியாத சொத்துகளை முறையாக கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்க எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (இ) | இலங்கை புகையிரத சேவைக்கு 150 ஆண்டுகள் நிறையொட்டி 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கடுகண்ணாவ புகையிரத நூதனசாலை உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளை கவருவதற்காக காரணமாக இருந்த போதும் அதனைப் பாதுகாப்பதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அரசாங்க சொத்துக்களைப் பாதுகாப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருப்பதால் அதற்காக முறையான நடவடிக்கையொன்ற எடுக்கப்பட வேண்டும். | 2018 பெப்ரவரி 26 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய புகையிரத நூதனசாலையொன்றை நிறுவும் தேவைப்பாட்டினால் கடுகண்ணாவ நூதனசாலையை அபிவிருத்தி செய்தல் இடைநிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும் நூதனசாலையின் குறைகள் பூர்த்தி செய்யப்பட்டு பிரசித்தி நூதனசாலையொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | அம்பேபுஸ்ஸ கல் வேலைத்தளத்தில் மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் இருந்த போதும் அவற்றை பாதுகாப்பதற்கும் | பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல் துளையிடும் இயந்திரம் அதற்கு முன்னைய தினத்தில் கற்களை துளையிட்டு அந்த இடத்திற்கு கழுவுவதற்காகவே கொண்டு வரப்பட்டது. எனினும் தற்போதய |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | வரண் காலநிலைமை காரணமாக மாலையில் நீர் இல்லாமையால் கழுவுதற்கு சிரமமாக இருந்தது. அடுத்த நாள் கழுவி கராஜில் இடப்பட்டதாக |
| (ஊ) | அம்பேபுஸ்ஸ கல் வேலைத்தளத்திற்குரிய காணியில் 33 அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியிருப்பதால் சொத்துக்களின் பாதுகாப்பிற்கு தாககமொன்று உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | காணி முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவது தொடர்பாக குறித்த பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 3.11 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1983 முதல் 1987 வரையான காலப்பகுதியில் பயங்கரவாத தாக்குதலால் இடம்பெற்ற ரூபா 100,504,756 தொகையான நட்டங்கள் சேதங்கள் தொடரபாக எவ்வித ஆக்கபூர்வான செயற்பாடொன்று கடந்த 37 ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான இழப்புக்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்து பதிவழிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். | இவ்வாறான இழப்புக்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்து பதிவழிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளபட உள்ளது. |
| (ஆ) | சுனாமி காரணமாக புகையிரத திணைக்களததின் போக்கவரத்து அத்தியட்சகர் அலுவலகம் (கொழும்பு) இற்க நேர்ந்த ரூபா 6,210,343 ஆன நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கடந்த 15 வருட காலப்பகுதியில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான இழப்புக்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்து பதிவழிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். | துரிதமாக செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இரத்மலானை பிரதான புகையிரத இயந்திர பொறியியலாளர் பிரிவில் 1990 செப்தம்பர் 20 ஆந் திகதி முதல் 2019 செப்தம்பர் 14 ஆந் திகதி வரை அறிக்கையிடப்பட்டிருந்த நிதி நட்டங்கள் சேதங்கள் எண்ணிக்கை 37 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 30,187,729 ஆக இருந்தது. அந்த 37 நட்டங்கள் சேதங்களில் 23 களவு காரணமாக இடம் பெற்றிருந்த சேதங்களாக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 28,089,368 ஆக இருந்தன. இப்பிரிவின் பாதுகாப்பு சேவையில் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்த போதும் களவு அதிகரிக்கும் போக்கொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | களவு சம்பந்தமாக பூரண ஆராய்வு நடத்தப்பட்டு பொறுப்பானவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் இதறகு பிரதான காரணமாக உள்ளது. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் வரை வேறு அரசன் பாதுகாப்பு பிரிவோன்றிலிருந்த சேவையை பெற்றுக் கொள்வது பொருத்தமானதென பிரதான இயந்திர பொறியியலாளர் பரிந்துரைத்திருந்தார். |
| (ஈ) | ரூபா 40 மில்லியன் பெறுமதியான கல் துளையிடும் இயந்திரம் 2015 ஆம் ஆண்டின் போது தீப்பிடித்து சேதமடைந்தமை தொடர்பாக பரீட்சிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அந்த அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. தீப்பிடித்த இயந்திரத்தின் எஞ்சிய பாகங்களை முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி பயன்பாட்டுக் கட்டணங்களாக இரண்டு நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 54,824,188 தொகை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் காணி பயன்பாட்டுக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | அதிக ஊழியர் வெற்றிட அளவொன்று ஏற்பட்டிருந்தமையால் இந்நிலைமை ஏற்பட்டிருந்தமை மற்றும் அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக |
| (ஆ) | வீதி மற்றும் கைத்தொழில் உப திணைக்களத்திற்கு 2019 ஆம் ஆண்டில் ஊழியர்களை வெளியிலிருந்து ஆட்சேர்ப்பதற்காக ரூபா 22,298,512 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஊழியர் வெற்றடங்களுக்காக வெளிவாரியாக ஊழியர்கள் ஆட்சேர்ப்ப செய்யபட்டு அந்தந்த பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டு சேவைகளைப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் வெளிக்களத்தில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது முறையாக அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான செயற்பாடுகள் வாடகை அடிப்படையில் நிறைவேற்றுதல் பொருத்தமாகும். | புகையிரத திணைக்களத்தில் காணப்படும் ஊழியர் பற்றாக்குறையால் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு இநந்டவடிக்கைகளை நிறைவேற்றுவதில் தாமதம் இடம்பெற்றிருந்தது. எவ்வாறாயினும் 90 நாட்களுக்குள் ஒப்பந்தகாரர்களை ஈடுபடுத்துவதன் மூலம் நவடிக்கை எடுத்தல் நடைமுறைச் சாத்தியமற்றதால் இருக்கும் ஊழியர்களிடமிருந்து ஆகக்கூடிய சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | தற்போது 03½ ஆண்டுகளுக்கு முன் இருந்து புகையிரத வீதி ஊடாக எரிபொருள் போக்குவரத்து மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் வெற்று தாங்கிகள் இணைத்த வருகை தரல் அல்லது | திணைக்களத்தின் சொத்துக்களை இவ்வாறு முறையற்ற விதத்தில் பாவனைக்கு இடமளிக்க கூடாது. | ஹட்டன் புகையிரத நிலையத்தில் புகையிரத சாரதிகளுக்கும் காப்பாளர்களுக்கும் தங்குமிட வசதிகள் இல்லாமை இதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் தற்போது வதிவிட |

| | | | |
|---|---|---|---|
| | நிரப்பப்பட்ட எண்ணைத் தாங்கி இணைப்போ இடம்பெறாமல் புகையித காப்பாளர்களின் தேவைப்பாட்டிற்காக நாவலப்பிட்டியிலிருந்து ஹட்டன் வரையும் ஹட்டனிலிருந்து நாவலப்பிட்டி வரையிலும் காப்பாளர் கூடமொன்று இணைக்கப்பட்டு புகையிரதம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எரிபொருள் தாங்கிகளை இணைத்துக்கொண்டு செல்லாத திகதிகளில் புகையிரதத்தை இவ்வாறு இயக்குவதற்காக உரிய அதிகாரியொருவரினால் முறையான அங்கீகாரமொன்றோ அல்லது அதிகாரமொன்றோ வழங்கப்படாமல் இருந்ததுடன் அவ்வாறு சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்படும் புகையிரத ஓட்டத்தின் எண்ணிக்கைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த 03 ஆண்டுகளில் பெற்றோலியம் போக்குவரத்துச் செய்யப்பட்ட தினங்கள் தவிர அதிகாரமின்றி சிக்கனமற்ற வகையில் புகையிரதம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டமையால் புகையிரத திணைக்களத்திற்கு ரூபா 58,968,000 ஆன செலவின பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது. | | வசதிகளை வழங்க இயலுமை உள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பல்வேறு பதவிகளில் வெற்றிடங்களுக்காக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். ஓய்வுபெற்ற திகதியில் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றம் படிகள் கொடுப்பனவு செலுத்த நேர்ந்தமையால் வெற்றிட பதவிகளுக்கு சேர்க்கப்படும் புதியவர்களை விட நூற்றுக்கு 100 சதவீதம் மற்றும் நூற்றுக்கு 80 சதவீதம் | வெற்றிட பதவிகளுக்காக புதிதாக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதினூடாக சம்பளச் செலவினத்தை குறைத்துக் கொள்ள முடியும் | ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக |

| | | | |
|---|---|---|---|
| | மிகைக்கும் வகையில் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்தமையால் திணைக்களத்தினால் அதற்காக பாரியளவு நிதி செலவினைப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | புகையிரத திணைக்களத்தின் வருடாந்த கல் தேவைப்பாடு 40,600 கியுப்களாக இருந்ததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 15,313 கியுப் கற்கள் வெளியிலிருந்து கொள்வனவு செய்வதற்காக திணைக்களம் ஆண்டொன்றிற்கு ரூபா 81,552,633 அளவிலான தொகையொன்று செலவிட்டிருந்ததுடன் திணக்களத்தின் கட்டிட பரிசோதனை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக தேவையான 3/4'' கற்கள் மற்றம் கல்லு தூள் என்பன அதிகளவில் கொள்வனவு செய்யப்படுவதுடன் அத்தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்திடன் உள்ள சொத்துக்களில் இருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேவையான தகவல்களை தாமதமின்றி வழங்குவதற்கு உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே அம்பேபுஸ்ஸ கல் குவாரியின் செயன்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொறியியலாளர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.13 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புகையிரத என்ஜின் மற்றும் பெட்டிகளில் காணப்படும் Shock absobers இயந்திர அலகின் திருத்தங்களை மேற்கொள் வதற்காக பொறியொன்றை கொள்வனவு செய்வதற்காக 03 ஆண்டுகள் பெறுகை செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதும் இதுவரை அவ்வியந்திரம் கொள்வனவு | நவீன தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தி புகையிரத சேவையை செயற் திறனாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொள்வனவு செய்வதற்காக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று (TEC) நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாமையால் அப்பரிசோதனைகள் கையினால் இயக்கும் இயந்திரமொன்றின் மூலம் (Manual System) மேற்கொள்ளப்படுகின்றது. | | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது RLM 3507/14 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 1,080,340 பெறுமதியான பொருட்கள் திணைக்களத்தின் விதந்துரைகளுடன் இணங்காமல் இருந்ததுடன் அதற்காக பொருத்தமான பொருத்தமான பொருட்களை கொண்டு வருவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் அப்பொருட்களுக்காக வழங்கப்பட்டிருந்த வங்கி பிணைப்பொறுப்பின் செல்லுபடிக் காலமும் முடிவடைந்திருந்தன. | வங்கி பிணைப் பொறுப்பின் செல்லுபடிக் காலத்தை நீடித்து பொருத்தமான பொருட்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழங்குனருக்கு செலுத்த வேண்டிய வேறு தரவாணைக்குரிய தொகையில் தீர்வுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக |
| (இ) | ரூபா 4,644,739 பெறுமதியான 1,000 Brake Pad Assembly மாளிகாவத்த FC & W களஞ்சியத்திற்கு 2015 திசெம்பர் 21 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் குறித்த பொருள் பெறுவனவு பத்திரம் (GRN) 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்வதற்கு களஞ்சிய அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் விநியோகிக்கப்பட்ட உடன் குறித்த உப திணைக்களத்தினால் பொருள் பெறுவனவு பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தகைமை அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொருள் பெறுகை பத்திரத்தை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மவுன்ட்ரோன்ட் விளையாட்டரங்கு மற்றும் புகையிரத சமூக நிறுவகத்தினால் உழைக்கும் வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் நிறுவகத்தின் செலவினத்தை மீள் நிரப்புவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய PED/RED/07/FR/Gen உடைய கடிதத்தின் பிரகாரம் குடியரசிற்கு சொந்தமான அனைத்து வருமானத்தை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் செலவினத்திற்காக ஒதுக்கீட்டு சட்டத்தினால் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள ஆலோசணை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட பொறியியலாளரால் (உயர்) 2018 செப்தம்பர் மாதம் 26 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த DRG NO – 22509 இலக்கமுடைய கட்டிட திட்டத்திற்கு இணங்க நிர்மாணிக்கப்படாதிருந்தது டன் உரிய திருத்தங்கள் குறிப்பிடப்பட்டு திருத்திய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட கட்டிட திட்டத்திற்கு இணங்க நிர்மாணிக்கப்பட வேண்டியதுடன் திருத்தங்கள் இருந்தால் அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக |
| (இ) | நிதிப்பிரமாணம் 213 இன் பிரகாரம் செக்ரோல் மூலம் சம்பளம் பெறும் தொழிலாளர்களின் நாளாந்த வருகை சரியானதென அது தொடர்பான அதிகாரம் கையளிக்கப்பட்ட | நிதிப்பிரமாணம் 213 இன் பிரகாரம் செக்ரோல் மூலம் சம்பளம் பெறும் தொழிலாளர்களின் நாளாந்த வருகை சரியானதென அது தொடர்பாக அதிகாரம் | கணக்காய்வினால் வழங்கப்பட்டிருந்த ஆலோசண பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| உத்தியோகத்தரொருவரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மேற்பார்வை உத்தியோகத்தர் அதனை மீண்டும் பரீட்சக்க வேண்டும். இதற்கு மேலதிக மாக வெவ்வேறு வெளி நிலையங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்கள் இருந்தால் அவர்களின் வருகை சரியாக பதிவுசெய்யப்பட்டு அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் இடம் பெயரிடப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2019 செப்தம்பர் 10 ஆந் திகதி வரையிலும் கட்டிடங்கள் பரீட்சிப்பு அலுவலகங்களில் செக்ரோல் மூலம் சம்பளம் உத்தியோகத்தர்களின் மேற்பார்வை உத்தியோகத்தரின் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் அங்கீகரிக்கப்படாமை இந்த தொழிலாளர்களின் கடமைகளை மேற்பார்வை செய்வதற்காக கங்காணியொருவர் இல்லாமையால் 2019 செப்தம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் 09 ஆந் திகதி வரை ஊழியர்களின் பெயர்கள் மாத்திரம் செக்ரோல்களில் பதிவுசெய்யப்பட்டு அதன் மூலம் அரசின் பணம் தவறாக கையாடல் இடம் பெறுவதாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப் படவில்லை. | கையளிக்கப்பட்ட உத்தியோகரால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.15 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கத்தவர்களின் அங்கத்துவப்பணம் மற்றும் அங்கத்தவர் வைப்புப் பணம் என்பவற்றிலிருந்து கட்டியெழுப்பப்பட்டுள்ள இலங்கை புகையிரத உத்தியோக புகையிரத சேவை நிறுவன நிதியத்தின் நிதிக்கட்டுப்பாட்டை முறைப்படுத்தும் பொறுப்பு நிர்வாகச் சபைக்குரியதாகும். எனினும் 2020 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரூபா 64 மில்லியன் மீதியாக உள்ள மக்கள் வங்கியின் 176100193280345 ஆம் இலக்க கணக்கிற்குரிய 44 வெற்றுக் காசோலைகளுக்கு (அதாவது 134457 முதல் 134500 வரை) நிதியத்தின் தலைவரால் கையொப்பமிடப்பட்டிருந்தன. இதன் மூலம் நிதி மோசடியொன்று இடம் பெறக்கூடிய சாத்தியக்கூறு உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | நிதி மோசடிகளைக் குறைப்பதற்கு நிர்வாக சபையுடன் சட்டத்தின் 6.1 மற்றும் 07 ஆம் பிரிவுகளின் அதிகாரத்தின் பிரகாரம் புகையிரத பொது முகாமையாளர் தொடர்புபடுத்தப்பட் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1947 இன் 50 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் மற்றும் திருத்திய சட்டமொன்று மூலம் நிர்வகிக்கப்படுவதால் புகையிரத பொது முகாமையாளரின் மேற்பார்வை இடம் பெறுவதில்லையெனவும் கணக்காய்வில் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் தொடர்பாக நிறுவனம் அறிவுறுத்தப்பட்டதாக |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏதாவதொரு செயற்பாட்டின் பிழையற்ற செயலாற்றலை அளந்து கொள்வதற்கு சரியானதொரு தரவு அடிப்படை இருப்பது கட்டாய தேவையாக இருந்த போதிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவதனை மதிப்பீடு செய்வதற்கு சரியானதுமான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கும் தேவையான இலக்கினை இனங்கண்டு கொள்வதற்கும் சரியான தரவு முறைமையொன்றை ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது புகையிரத திணைக்களத்தினுள் முறையான காணப்படவில்லை. எனினும் (ERP system) செயற்படுத்தப்பட்டதன் பின்னர் இந்நிலைமை வேறு நிலைமை வேறுபடும். |

**5.** **நல்லாளுகை**

**5.1** **பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி புகையிரத நிலையத்திற்கு தொடர்பாக மலைநாட்டு வீதியில் தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த காற்றுச் சீராக்கப்பட்ட புகையிரத பிரவேச்சீட்டு ஒதுக்கீட்டு செயற்பாடு பிரயாணிக்கும் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த ஆசன ஒதுக்கீட்டிற்கு திறக்கப்பட்ட திகதியிலிருந்து 95 சதவீதம் அளவில் ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதுடன் வார நாட்களில் பிரயாணத்திற்காக இரண்டு மூன்று நாட்களுக்கு இடையே அனைத்து ஆசனங்களும் முடிவடைகின்றது. இதன் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆசனங்களில் பிரயாணிப்பதற்கு எதிர்பார்க்கும் பயணிகளின் எண்ணிக்கை போதியளவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆசனங்கள் இல்லாமை மற்றும் மேலதிக புகையிரதமொன்று இல்லாமையால் அந்த சந்தர்ப்பம் மிகைத்து செல்வதாக அவதானிக்கப்பட்டன. | ஆசன ஒதுக்கீடு குறித்துரைக்கப்பட் ட நடைமுறை யொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் எதிர்பார்த்த E-Ticketing முறைமையின் கீழ் online முறை ஊடாக ஆசனங்களை ஒதுக்கீடு செய்யும் வசதி பொது மக்களுக்கு செய்து கொடுக்கப்படும். |
| (ஆ) | புகையிரதத்தின் மூலம் போக்குவரத்திற்கு கையேற்கப்படும் பொதிகள் பாதுகாப்பு பிரிவின் பரிசோதனைக்கு உட்படாமை அவதானிக்கப்பட்டதுடன் அது புகையிரத பிரயாணிகளின் | புகையிரதத்தின் மூலம் போக்குவரத்திற்கு கையேற்கப்படும் பொதிகள் பாதுகாப்பு பிரிவின் பரிசோதனைக்கு | புகையிரதத்தின் மூலம் போக்குவரத்திற்கு கையேற்கப்படும் பொதிகள் அனைத்தும் பொறுப்பேற்பதற்கு முன்னர் அனுப்புவருக்கு |

| | | |
|---|---|---|
| பாதுகாப்பு தொடர்பிலும் தாக்கமளிப்பதாக அவதானிக்கப்பட்டது. | உட்படுத்தப்பட வேண்டும். | முன்னர் புகையிரத நிலைய அதிபரால் பரீட்சிக்கப்பட்டு திருப்திப்பட்டால் மாத்திரம் பொறுப்பேற்கப்படும் |

## 6. மனிதவள முகாமைத்துவம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேட்ட நிலை | 212 | 127 | 85 |
| மூன்றாம் நிலை | 451 | 125 | 326 |
| இரண்டாந்தர நிலை | 11,273 | 5,814 | 5,459 |
| ஆரம்ப நிலை | 8,601 | 6,038 | 2,563 |
| அமைய/ஒப்பந்தம் | - | - | - |
| மொத்தம் | 20,537 | 12,104 | 8,433 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 சனவரி 28 ஆந் திகதிய 02/2018 பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் செயலாற்றல் மதிப்பீட்டு குழுவிற்கு மேலதிகமாக செயலாற்றல் உடன்படிக்கையொன்று கையொப்பமிடுவதன் மூலம் உத்தியோகத்தர்களின் செயலாற்றலை அதிகரித்தல் | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 சனவரி 28 ஆந் திகதிய 02/2018 பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் இயலுமை ஆராய்ந்து பாரத்து அறிக்கையிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலிருந்து அந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் கட்டாயமானதாக இருந்த போதும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் செயலாற்றல் தொடர்பாக அவ்வாறான உடன்படிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அச்சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்த அத்திகதி முதல் செயற்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் குறைந்தது 02 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாளது வரையாக்கப்பட வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. திணைக்களத்தினால் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | திணைக்களத்தின் 11 பதவிகளுக்குரிய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமன செயற்பாட்டு நிர்வாக சட்ட விதிக் கோவையின் iv ஆம் அத்தியாயத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அரசாங்க வேகைள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமன செயற்பாட்டு நிர்வாக சட்ட விதிக் கோவையின் iv ஆம் அத்தியாயத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அரசாங்க வேகைள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | 05 பதவிகள் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பதவிகளுக்காக அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட உள்ளன. |
| (இ) | புகையிரத திணைக்களத்தினால் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் தரவுகளின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சிரேஷ்ட மட்டத்தின் | விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப பதவிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காக தகைமையுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமையால் கடமை மேவுகைக்காக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 185 ஆக இருந்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 40 சதவீதமாகும். இந்நிலைமை திணைக்களத்தின் செயலாற்றலை உயர்ந்த மட்டததில் வைத்துக்கொள்வது தொடர்பில் வைத்துக்கொள்வதில் தாக்கமளிக்கும் என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | புகையிரத திணைக்களத்தில் காணப்படும் வெவ்வேறு பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள சேவையிலிருந்து ஓய்வுபெற்ற 405 உத்தியோகத்தர்கள் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். புகையிரத ஓட்டத்திற்கு நேரடியாக தொடர்புடைய 2,278 வெற்றிடங்கள் காணப்படுகையில் 237 பதவிகளுக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இந்த அளவு மொத்த வெற்றிடங்களின் அளவுகளில் 10 சதவீதத்தை மேவுகை செய்கின்றன. இவ்வாறான நிலைமை புகையிரத செயலாற்றல் தொடர்பில் நேரடியாக தாக்கமளிப்பதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களுக்காக புதிதாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த பதவிகளில் வெற்றிடங்களை துரிதமாக நிரப்பும் இயலுமை இல்லாததால் புகையிரத சேவைகளை தடைப்படாமல் பேணிச்செல்ல வேண்டியுள்ளதால் ஒப்பந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக |
| (உ) | திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினர்களுக்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 35 ஆக இருந்ததுடன், அவ்வாறு | திணைக்களத்தில் வெற்றிடங்கள் காணப்படும் போது வேறு நிறவனங்களின் தேவைகளுக்காக ஊழியர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிக்கப்பட்ட பதவிகளில் வெற்றிடங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டன. செயற்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் திணைக்களத்தினால் ஏற்கப்பட்டிருந்ததுடன் அவற்றை மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கூடாது. | |
| (ஊ) | மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 8,433 வெற்றிடங்கள் காணப்பட்டன. ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாதிருந்தமை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் நீண்ட தாமதங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாத சேவைகளுக்காக அவற்றை விரைவில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (எ) | பதவியொன்று வெற்றிடமாக இருந்தால் அப்பதவிக்கு கடமை மேவுகைக்காக மேலதிக நேரப் படிகள் அங்கீகரிக்கப்படக்கூடாததுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காணப்படும் நிலைமையை கருத்திற் கொண்டு தீர்மானம் எடுத்தல் திணைக்களத் தலைவரினால் மேற்கொள்ள வேண்டும். போதும் அவ்வாறான நிலைமையொன்று கருத்திற் கொள்ளப்படாமல் வெற்றிட பதவிகளின் செயற்பாடுகளை மேவுகை செய்வதற்கு உத்தியோகத்தரொருவருக்கு மாதமொன்றக்கு 80 மணித்தியாலயத்திற்கு மேலதிகநேர வேலைகளை அங்கீகரிக்கும் நடைமுறை அவதானிக்கப்பட்டது. | கடமை தேவைப்பாட்டின் பேரில் மாத்திரம் மேலதிக நேர படிகள் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுவதால் மேலும் வெற்றடங்கள் உருவாகும் போ்து புதிய ஆட்சேர்ப்பு தேவைப்பாடத போது மேலதிக சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் அத்தியவசிய கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. |
| (ஏ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 16 நிலஅளவையாளர்களுக்காக நில அளவை அத்திட்சகர்கள் சேவையில் ஈடுபடுத்த | பொது திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையின் பிரகாரம் நடவடிக்கை | நிலஅளவைத் திணைக்களத்தின் மூலம் 02 நிலஅளவை அத்தியட்சகர்களை அனுப்புவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் 08 நிலஅளவையாளர்களின் மேற்பார்வை செயற்பாடு இரண்டு நில அளவை அத்திட்சகர்களால் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் 16 நிலஅளவையாளர்களை அனுப்புவதற்கு அவர்களுக்கு இயலுமை இல்லை. எவ்வாறாயினும் இதுவரை 08 நில அளவையாளர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. |
| (ஐ) | புகையிரத காப்பாளர்களின் சேவை முறையாக திருத்தம் செய்யப்படாமை காரணமாக மேலதிக உத்தியோகத்தர்களை சேவையில் ஈபடுத்துவதற்கு நேர்ந்தமையால் மேலதிக கிரயமொன்று மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | சேவை தடவைகளை திருத்தம் செய்யும் போது மேலதிக கிரயமொன்று மேற்கொள்ளாமல் திட்டமிடுவதற்கு நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்கள் நிலவுகின்றதால் புகையிரத காப்பாளர்களின் சேவை தடவைகள் மேலதிக நேர கொடுப்பனவை அடிப்படையாக கொண்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கு நேர்ந்துள்ளது. அவ்வாறு மேலதிக நேரம் செலுத்தாமல் இருக்க உரிய ஊழியர் எண்ணிக்கை இருத்தல் வேண்டும். |
| (ஒ) | புகையிரத திணைக்களத்தினால் உணவுத் திணைக்களத்திடமிருந்து 2008 ஆம் ஆண்டிலிருந்து வாப்பு உத்தியோகத்தர்களின் சேவைகளும் நிலஅளவைத் திணைக்களத்தின் 10 உத்தியோகத்தர்களின் சேவைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. வாப்பு உத்தியோகத்தர்களின் சம்பளம் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் வெற்றிடமாக இருந்தால் அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாப்பு எழுதுனர்களின் சம்பளம் உணவுத் திணைக்களத்தினால் அவர்களுக்கான கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அது புகையிரத திணைக்களத்தினால் உணவுத் திணைக்களத்திற்கு மீள்நிரப்பப்படுகின்றது. வாப்பு எழுதுனர்களுக்கு செலுத்தப்படும் மேலதிக நேரப் படிகளுக்கான கிரயம் திணைக்களத்தின் செலவினத் தலைப்பிலிருந்து செலுத்தப்படுகின்றது. |